**<u>கடையநல்லூர் நகர்மன்றத்தின் அவசரக்கூட்டம்– 2018ம் ஆண்டு ஜனவரி மாதம் 29ம் தேதி கிழமை மாலை 4.00 மணியளவில் தனி அலுவலர் அவர்களால் நடத்தப்பட்டது.</u>**

**<u>பொருள் எண்– 01</u>**

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் 100 ஆகும். அதில் பணி ஓய்வு மற்றும் இறப்பின் காரணமாக தற்போது 80 பணியாளர்கள் மட்டுமே பணிபுரிந்து வருகின்றனர். மீதமுள்ள 20 துப்புரவு பணியாளர்கள் பணியிடங்கள் இதுநாள் வரை காலியாக உள்ளது. மேலும் அரசாணை எண்.101-ல் குறிப்பிட்டுள்ள அளவுகோலின்படி இந்நகராட்சிக்கு அனுமதிக்கப்பட வேண்டிய பணியிடங்கள் 304 -ல் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட 100 துப்புரவு பணியாளர் பணியிடங்கள் போக மீதமுள்ள 204 பணியாளர்களை தனியார் மூலம் (Outsourcing) பெற்று துப்புரவு பணிகள் மேற்கொள்ளவும், ஒரு வருடத்திற்கான உத்தேச செலவுத்தொகை ரூ.3.10/- (மூன்று கோடியே பத்து இலட்சத்திற்கும்)-க்கு மன்றத்தின் அனுமதி பெற்று துப்புரவு பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி வேண்டி கடிதம் அனுப்பலாம். மேலும் பொதுசுகாதார அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதி நகர்மன்றத்தின் பின்னேற்பினை எதிர்நோக்கி 25.01.2018 அன்று தனி அலுவலர் அவர்ளின் முன் அனுமதி பெற்று பிரேரணை அனுப்பியதற்கும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண். 6035/ 2016/எச்1)**

**<u>தீர்மானம் எண். 25</u>**

அஙகீகரிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்– 02</u>**

மாவட்ட ஆட்சித் தலைவர், திருநெல்வேலி மற்றும் நகராட்சி மண்டல நிர்வாக இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் உத்தரவின் பேரில் இந்நகராட்சிப் பகுதியில் டெங்கு தடுப்பு பணிகள் மேற்கொள்ள தற்காலிக கொசு ஒழிப்பு பணியாளர்களை அதிக அளவில் பணியில் ஈடுபடுத்த தெரிவிக்கப்பட்டுள்ளதால். டெங்கு தடுப்பு பணிக்கு கடையநல்லூர் மற்றும் சுற்று வட்டார பகுதியில் உள்ள 40 வயதுக்குட்பட்ட ஆண், பெண் தேவை என பொதுசுகாதார அவசர அவசியம் மற்றும் டெங்கு தடுப்பு அத்தியாவசியம் கருதி தனி அலுவலர் அவர்களிடம் 19.01.2018 அன்று முன்அனுமதி பெற்று தினமலர் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்ய நடவடிக்கை மேற்கொண்ட வகைக்கும், அதற்கான உத்தேச செலவுத்தொகை ரூ.10,000/- (பத்தாயிரம் மட்டும்)-க்கும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண்.355/2018/எச்1)**

**<u>தீர்மானம் எண். 26</u>**

அங்கீகரிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்– 03</u>**

மாவட்ட ஆட்சித் தலைவர், திருநெல்வேலி அவர்கள் 07.01.2018ம் தேதிய ஆய்வின் போது டெங்கு காய்ச்சல் பரவுவதை தடுக்கும் விதமாக தேவையான புகைமருந்து பரப்பும் இயந்திரங்கள் வாங்கி பயன்படுத்துமாறு கூறிய அறிவுரையின்படி, இந்நகராட்சிப் பகுதியில் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைக்கு பொதுசுகாதாரப் பிரிவிற்கு தேவையான உள்புறம் மற்றும் வெளிப்புறமாக புகைமருந்து பரப்பும் இயந்திரங்கள் இரண்டு எண்ணம் வாங்குவதற்கும், அதற்கான உத்தேச செலவுத்தொகை ரூ.7.00/- (ஏழு இலட்சம் மட்டும்) க்கும் அனுமதிக்காக.

மேலும் பொதுசுகாதார அவசர அவசியம் கருதி மற்றும் டெங்கு தடுப்பு அத்தியாவசியம் கருதி தனி அலுவலர் அவர்கள் 25.01.2018 அன்று முன் அனுதி வழங்கியதின் அடிப்படையில் புகைப்பரப்பும் இயந்திரம் வாங்குவதற்கு குறுகியகால ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண்.353/2018/எச்1)**

**<u>தீர்மானம் எண். 27</u>**

**அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண்– 04**

மாவட்ட ஆட்சித் தலைவர், திருநெல்வேலி அவர்கள் 07.01.2018ம் தேதிய ஆய்வின் போது டெங்கு காய்ச்சல் பரவுவதை தடுக்கும் விதமாக தேவையான புகைமருந்து பரப்பும் இயந்திரங்கள் வாங்கி பயன்படுத்துமாறு கூறிய அறிவுரையின்படி, இந்நகராட்சிப் பகுதியில் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைக்கு பொதுசுகாதாரப் பிரிவிற்கு தேவையான வாகனத்தில் பொருத்தி பயன்படுத்தக்கூடிய புகைப்பரப்பும் இயந்திரங்கள் இரண்டு எண்ணங்களும் (Vehicle Mount Type Fogg Machine) , உள்புறம் மற்றும் வெளிப்புறம் புகைப்பரப்பும் இயந்திரங்கள் பத்து எண்ணங்களும் (Indoor And Outdoor Fogging Machine) (DGS&D) அரசு நிர்ணயம் செய்த விலைவிகிதத்தில் Sevenstar Trading Company, Teynampet, Chennai நிறுவனத்தின் மூலம் வாங்குவதற்கும், அதற்கான உத்தேச செலவுத்தொகை ரூ.19.00/- (பத்தொன்பது இலட்சம் மட்டும்) க்கும் அனுமதிக்காக.

மேலும் பொதுசுகாதார அவசர அவசியம் கருதி மற்றும் டெங்கு தடுப்பு அத்தியாவசியம் கருதி தனி அலுவலர் அவர்கள் 29.01.2018 அன்று முன் அனுதி வழங்கியதின் அடிப்படையில் வாகனத்தில் பொருத்தி பயன்படுத்தக்கூடிய புகைப்பரப்பும் இயந்திரங்கள் இரண்டு எண்ணங்களும் (Vehicle Mount Type Fogg Machine), உள்புறம் மற்றும் வெளிப்புறம் புகைப்பரப்பும் இயந்திரங்கள் பத்து எண்ணங்களும் (Indoor And Outdoor Fogging Machine) வாங்குவதற்கு விநியோக உத்தரவு வழங்கியதற்கும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண்.2079/2017/எச்1)**

**தீர்மானம் எண். 28**

அங்கீகரிக்கப்பட்டது.

**பொருள் எண்– 05**

மாவட்ட ஆட்சித் தலைவர், திருநெல்வேலி அவர்கள் 07.01.2018ம் தேதிய ஆய்வின் போது டெங்கு காய்ச்சல் பரவுவதை தடுக்கும் விதமாக தேவையான புகைமருந்து பரப்பும் இயந்திரங்கள் வாங்கி பயன்படுத்துமாறு கூறிய அறிவுரையின்படி, இந்நகராட்சிப் பகுதியில் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைக்கு பொதுசுகாதாரப் பிரிவிற்கு தேவையான வாகனத்தில் பொருத்தி பயன்படுத்தக்கூடிய புகைப்பரப்பும் இயந்திரங்கள் இரண்டு எண்ணம் வாங்குவதற்கும், அதற்கான உத்தேச செலவுத்தொகை ரூ.9.80/- (ஒன்பது இலட்சத்து எண்பதாயிரம் மட்டும்) க்கும் அனுமதிக்காக.

மேலும் பொதுசுகாதார அவசர அவசியம் கருதி மற்றும் டெங்கு தடுப்பு அத்தியாவசியம் கருதி தனி அலுவலர் அவர்கள் 25.01.2018 அன்று முன் அனுதி வழங்கியதின் அடிப்படையில் புகைப்பரப்பும் இயந்திரம் வாங்குவதற்கு குறுகியகால ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண்.353/2018/எச்1)**

**தீர்மானம் எண். 29**

அங்கீகரிக்கப்பட்டது.

**பொருள் எண்– 06**

நகராட்சி மண்டல நிர்வாக இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் 04.01.2018ம் தேதிய கடிதத்தில், இந்நகராட்சிப் பகுதியில் உள்ள பொதுமக்களிடம் மக்கும் குப்பை மற்றும் மக்காத பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்திட நோட்டீஸ்கள், ஸ்டிக்கர்கள் ARUMBAKKAM STATIONARIES & PRINTING SERVICE INDUSTRIAL CO-OPERATIVE SOCIETY LTD., CHENNAI நிறுவனத்தில் வாங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சிப் பகுதியில் குடியிருப்புகள், வணிக நிறுவனங்கள், அரசு கட்டிடங்கள் உட்பட மொத்தம் 30,000 எண்ணம் உள்ளது. எனவே இந்நகராட்சிக்கு தேவையான 30,000 எண்ணம் மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை பற்றிய விழிப்புணர்வு ஸ்டிக்கர்கள் ARUMBAKKAM STATIONARIES & PRINTING SERVICE INDUSTRIAL CO-OPERATIVE SOCIETY LTD., CHENNAI நிறுவனத்தின் மூலம் அச்சடித்து

வாங்கவும், அதற்கான உத்தேச செலவுத்தொகை ரூ.3,00,000/-(மூன்று இலட்சம் மட்டும்)-க்கும் அங்கீகாரத்திற்காக.

மேலும் பொதுசுகாதார அவசர அவசியம் மற்றும் டெங்கு தடுப்பு அத்தியாவசியம் கருதி தனி அலுவலர் அவர்களிடம் 10.01.2018 அன்று முன்அனுமதி பெற்று மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை பற்றிய விழிப்புணர்வு ஸ்டிக்கர்கள் அச்சடித்து வழங்க விநியோக உத்தரவு வழங்கியதற்கும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண்.194/2018/எச்1)**

**<u>தீர்மானம் எண். 30</u>**

அங்கீகரிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்– 07</u>**

இந்நகராட்சிப் பகுதிகளில் உள்ள இடைநிலை நீருந்து நிலையம், கிருஷ்ணாபுரம் பார்க் மற்றும் மாவடிக்கால் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகளை 03.04.2017 முதல் 6 மாத காலத்திற்கு ரூ.1,80,000/– உத்தேச மதிப்பீட்டில் ஒப்பந்த அடிப்படையில் Outsourcing முறையில் 3 பணியாளர்கள் மூலம் பராமரிப்பு பணிகளை மேற்க்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண். 151, நாள்.21.03.2017ன்படி அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் மேற்காணும் பணிக்கான வேலை உத்திரவு 03.04.2017 அன்று வழங்கப்பட்டு 7/2017 முதல் மேற்க்கொள்ளப்பட்டு வந்த நிலையில் அப்பணிக்கான ஒப்பந்தத் காலம் 12/2017வுடன் முடிவுற்றுள்ளது. இந்நிலையில் மேற்காணும் குடிநீர் பராமரிப்பு பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் மேற்கொண்டு வரும் நிலையில் குடிநீர் பணியின் அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதியும் பொதுமக்களின் நலனினை கருத்திற் கொண்டும் 01.01.2018 முதல் 31.01.2018 வரை உள்ள நாட்களுக்கு ஏற்கனவே 03.04.2017 முதல் 31.12.2017வரை பராமரிப்பு பணிகளை மேற்கொண்டு வரும் ஒப்பந்தக்காரர் திரு.APMA.காஜா மூலம் ஒப்படைப்பு பணியாக தொடர்ந்து மேற்கொள்ள இந்நகராட்சி தனிஅலுவலர் 05.01.2018 அன்று முன் அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் ஒப்பந்த அடிப்படையில் Outsourcing முறையில் 3 பணியாளர்கள் மூலம் 01.01.2018 முதல் 31.01.2018 வரை குடிநீர் பராமரிப்பு பணிகளை 03.04.2017 முதல் 31.12.2017 வரை மேற்கொண்ட அதே விலை விகிதத்தில் மேற்க்கொள்ளவும் அதற்கான செலவினத் தொகைக்கும் அங்கீகாரத்திற்காக சமர்பிக்கப்படுகிறது.

மேற்காணும் பணிகளுக்கான செலவீனத் தொகைகளை இந்நகராட்சி குடிநீர் தலைப்பு நிதியின் கீழ் மேற்க்கொள்ளவும் அங்கீகாரத்திற்காக

**(ந.க.எண். 437/2017/இ1)**

**<u>தீர்மானம் எண். 31</u>**

அங்கீகரிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்– 08</u>**

ஆணையாளர் அவர்களின் நேரடி அறிவுரையின் படி, 02.01.2017 முதல் ஒப்பந்த அடிப்படையில் இந்நகராட்சி பொறியியல் பிரிவு மற்றும் பொதுசுகாதார பிரிவில் பராமரிக்கப்படும் வாகனங்களை இயக்குவதற்கு போதிய ஓட்டுநர் பணியாளர்கள் இல்லாததால் ஒப்பந்த அடிப்படையில் ஒப்பந்தகாரர் மூலம் Outsourcing முறையில் ரூ.7,00,000/– உத்தேச மதிப்பீட்டில் மேற்க்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண். 81, நாள்.30.12.2016ன்படி ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வரப்படுகின்றது. இந்நிலையில் மேற்காணும் பணியின் ஒப்பந்த காலம் 02.01.2018 தேதியுடன் முடிவுற்றுள்ளது. மேலும் பொதுசுகாதார பிரிவு, பொறியியல் பிரிவு மற்றும் குடிநீர் பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் மேற்கொண்டு வரும் நிலையில் பொதுசுகாதார பிரிவு மற்றும் குடிநீர் பணியின் அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதியும் பொதுமக்களின் நலனினை கருத்திற் கொண்டு ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொண்டு வேலை உத்திரவு வழங்கும் வரை ஏற்கனவே 02.01.2017 முதல் 31.012.2017வரை மேற்கொண்டு வந்த ஒப்பந்தக்காரர் திரு.APMA.காஜா மூலம்

பொதுசுகாதார பிரிவு மற்றும் குடிநீர் பணியின் அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதி 01.01.2018 முதல் ஒப்படைப்பு பணியாக மேற்கொள்ள இந்நகராட்சி தனிஅலுவலர் 05.01.2018 அன்று முன் அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில், மேற்காணும் பணிகளை 01.01.2018 முதல் தொடந்து அதே விலை விகிதத்தில் (PWD விலை விகித பட்டியலின்படி) ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொண்டு வேலை உத்திரவு வழங்கும் வரை மேற்கொள்ளவும் அதற்கான செலவீனத் தொகைக்கும் அங்கீகாரத்திற்காக சமர்பிக்கப்படுகிறது.

மேற்காணும் பணிகளுக்கான செலவீனத் தொகைகளை இந்நகராட்சி வருவாய் தலைப்பு நிதியின் கீழ் மேற்க்கொள்ளவும் அங்கீகாரத்திற்காக.

(ந.க.எண். 5204/2017/இ1 )

<u>தீர்மானம் எண். 32</u>

அங்கீகரிக்கப்பட்டது.

<u>பொருள் எண்– 09</u>

இந்நகராட்சிக்குட்பட்ட கீழ்காணும் பகுதிகளில் புதிய குடிநீர் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் பகிர்மான குழாய்கள் அனைத்தும் தெருக்களிலும் பதிக்கப்பட்டு பணிகள் முடிவடைந்துள்ளது. இந்நிலையில் மேற்காணும் பணிகளால் சேதமடைந்த சாலைகள், பதிக்கப்பட்ட பகிர்மான குழாய்களில் வீட்டு இணைப்புகளை மாற்றியமைத்தால் சேதமான சாலைகள் மற்றும் மழை போன்ற இயற்கை இடர்பாடுகளால் சேதமுள்ள சாலைகளை கணக்கீட்டு கீழ்காணும் விபரப்படி மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண்.2 கற்பக சுந்தர விநாயகர் கோவில் தெரு ( தேசிய நெடுஞ்சாலை–208 கிழக்கு பகுதி) தார்சாலை அமைக்கும் பணிக்கு. | 9.95/– |
| 2. | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண்.2 கற்பக சுந்தர விநாயகர் கோவில் தெரு ( தேசிய நெடுஞ்சாலை–208 மேற்கு பகுதி) தார்சாலை அமைக்கும் பணிக்கு. | 9.60/– |
| 3. | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண்.2 கோபால கிருஷ்ணசாமி கோவில் சன்னதி தெருவில் தார்சாலை அமைக்கும் பணிக்கு. | 9.98/– |
| 4. | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண்.3 கிருஷ்ணாபுரம் ரயில்வே பீடர் ரோடு தேசிய நெடுஞ்சாலை–208 முதல் சடை மாரியம்மன் கோவில் வரை தார்சாலை அமைக்கும் பணிக்கு. | 9.98/– |
| 5. | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண்.3 கிருஷ்ணாபுரம் ரயில்வே பீடர் ரோடு சடை மாரியம்மன் கோவில் முதல் மங்கம்மாசாலை வரை தார்சாலை அமைக்கும் பணிக்கு. | 9.00/– |
| 6. | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண்.3 திலகர் மேற்கு பகுதியில் தார்சாலை அமைக்கும் பணிக்கு. | 8.25/– |
| 7. | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண்.3 திலகர் கிழக்கு பகுதியில் தார்சாலை அமைக்கும் பணிக்கு. | 8.15/– |

| | | |
|---|---|---|
| 8. | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண்.3 கிழக்கு மலம்பாட்டை மேற்கு பகுதியில் தார்சாலை அமைக்கும் பணிக்கு. | 9.98/– |
| 9. | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண்.3 கிழக்கு மலம்பாட்டை கிழக்கு பகுதியில் தார்சாலை அமைக்கும் பணிக்கு. | |
| 10. | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண். 7,8,9 ஜவஹர் தெருவில் தார்சாலை அமைக்கும் பணிக்கு. | 9.98/– |
| 11. | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண். 4 பூந்தோட்ட தெருவில் (மங்கம்மா சாலை குறுக்கு தெரு) பேவர்கல் அமைக்கும் பணிக்கு. | 6.00/– |
| 12. | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண். 4 புலவர் தெருவில் (மங்கம்மா சாலை குறுக்கு தெரு) பேவர்கல் அமைக்கும் பணிக்கு. | 4.00/– |
| 13. | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண். 21, மற்றும் 25ல் உள்ள மேற்கு மலம்பாட்டை ரோடு அட்டக்குளம் சந்திப்பு முதல் மேலக்கடையநல்லூர் நகராட்சி பூங்கா வரை (முதல் பகுதி) தார்சாலை அமைக்கும் பணிக்கு. | 9.98/– |
| 14. | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண். 21, மற்றும் 25ல் உள்ள மேற்கு மலம்பாட்டை ரோடு அட்டக்குளம் சந்திப்பு முதல் மேலக்கடையநல்லூர் நகராட்சி பூங்கா வரை (இரண்டாம் பகுதி) தார்சாலை அமைக்கும் பணிக்கு. | 9.00/– |
| 15. | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண். 25ல் பண்பொழி ரோடு நகராட்சி பூங்கா முதல் கடகாலீஸ்வரர் கோவில் நுழைவாயில் வரை (முதல் பகுதி) தார்சாலை அமைக்கும் பணிக்கு. | 9.95/– |
| 16. | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண். 24ல் பண்பொழி ரோடு நகராட்சி பூங்கா முதல் கடகாலீஸ்வரர் கோவில் நுழைவாயில் வரை (இரண்டாம் பகுதி) தார்சாலை அமைக்கும் பணிக்கு. | 9.95/– |
| 17. | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண். 24ல் பண்பொழி ரோடு நகராட்சி பூங்கா முதல் கடகாலீஸ்வரர் கோவில் நுழைவாயில் வரை (மூன்றாம் பகுதி) தார்சாலை அமைக்கும் பணிக்கு. | 9.95/– |
| 18. | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண்.22, பண்பொழி ரோடு முதல் கண்ணார் தெரு வரை தார்சாலை அமைக்கும் பணிக்கு. | 9.95/– |
| 19. | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண்.22, கண்ணார் தெற்கு தெரு (மங்கம்மா சாலை முதல் கடகாலீஸ்வரர் கோவில் சன்னதி தெரு வரை) தார்சாலை அமைக்கும் பணிக்கு. | 9.25/– |
| 20. | இந்நகராட்சிப் பகுதியில் வார்டு எண்.22 மாரியம்மன் கோவில் சன்னதி தெருவில் தார்சாலை அமைக்கும் பணிக்கு. | 9.80/– |

| | | |
|---|---|---|
| 21. | இந்நகராட்சிப் பகுதியில் வார்டு எண்.22, மங்கம்மா சாலையில் தார்சாலை அமைக்கும் பணிக்கு. | 9.96/– |
| 22. | இந்நகராட்சிப் பகுதியில் வார்டு எண்.22, இந்திரா நகர் புதுக்காலணி மங்கம்மாள் சாலை முதல் அரசு மாணவர் விடுதி வரை தார்சாலை அமைக்கும் பணிக்கு. | 9.75/– |
| 23. | இந்நகராட்சிப் பகுதியில் வார்டு எண்.22, இந்திரா நகர் புதுக்காலணி (அரசு மாணவர் விடுதி முதல் கிழமேல் சாலை) வரை தார்சாலை அமைக்கும் பணிக்கு. | 8.25/– |
| 24. | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண். 25 மேற்கு மலம்பாட்டை ரோட்டில் தார்சாலை அமைக்கும் பணிக்கு. | 9.98/– |
| 25. | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண். 26 மேற்கு மலம்பாட்டை ரோட்டில் தார்சாலை அமைக்கும் பணிக்கு. | 9.98/– |
| 26. | இந்நகராட்சிப் பகுதியில் வார்டு எண்.22, வேதக் கோவில் தெருவில் தார்சாலை அமைக்கும் பணிக்கு. | 7.00/– |
| 27. | இந்நகராட்சிப் பகுதியில் வார்டு எண்.26 காமாட்சியம்மன் கோவில் தெற்கு தெருவில் தார்சாலை அமைக்கும் பணிக்கு. | 8.25/– |
| 28. | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண். 29, பேட்டை மலம்பாட்டை ரோடு தேசிய நெடுஞ்சாலை–208 முதல் ஆடறுப்பு மனை வரை (முதல் பகுதி) தார்சாலை அமைக்கும் பணிக்கு. | 9.98/– |
| 29. | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண். 31, பேட்டை மலம்பாட்டை ரோடு ஆடறுப்பு மனை முதல் பேட்டை நகராட்சி நடுநிலைப்பள்ளி வரை (இரண்டாம் பகுதி) தார்சாலை அமைக்கும் பணிக்கு. | 9.98/– |
| 30. | .இந்நகராட்சிப் பகுதி வார்டு எண். 31, பேட்டை மலம்பாட்டை ரோடு பேட்டை நகராட்சி நடுநிலைப்பள்ளி முதல் நகராட்சி மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி வரை (மூன்றாம் பகுதி) தார்சாலை அமைக்கும் பணிக்கு. | 9.98/– |
| 31. | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண். 31, பேட்டை மலம்பாட்டை ரோடு நகராட்சி மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி முதல் பெரிய பாலம் வரை (நான்காம் பகுதி) தார்சாலை அமைக்கும் பணிக்கு. | 9.98/– |
| 32. | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண். 28மற்றும் 30, பள்ளிக்கூடம் தென்வடல் தெருவில் தார்சாலை அமைக்கும் பணிக்கு. | 9.00/– |
| 33. | இந்நகராட்சி வார்டு எண்.32 ரகுமானியாபுரம் 1ம் மேற்கு பகுதியில் தார்ச்சாலை அமைக்கும் பணிக்கு. | 8.50/– |
| 34. | இந்நகராட்சி வார்டு எண்.32 ரகுமானியாபுரம் 1ம் கிழக்குப் பகுதியில் தார்ச்சாலை அமைக்கும் பணிக்கு. | 9.75/– |

மேற்காணும் விபரப்படி வரிசை எண். 1 முதல் 34வரை உள்ள பகுதிகளில் குடிநீர் பணிகளுக்காக தோண்டப்பட்ட சாலைகளில் மிகவும் சேதமுற்று குண்டு குழியுமாக உள்ளது. எனவே அச்சாலைகளை பொதுமக்கள் பயன்படுத்தும் போது மிகவும் சிரமங்கள் ஏற்படுவதோடு ஆபத்துகளும் ஏற்படுகிறது. ஆகவே அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதியும் பொதுமக்களின் நலனினை கருத்திற் கொண்டும் வரிசை எண்.1 முதல் 10 மற்றும் 13 முதல் 34 வரை உள்ள பகுதிகளில் உள்ள சாலைகளை தார்சாலையாகவும் வரிசை எண்.12 மற்றும் 13ல் உள்ள சாலைகளை பேவர்கல் பதிக்கும் சாலையாக அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்டு உத்தேச மதிப்பீட்டுத் தொகைக்கு அங்கீகாரம் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

மேலும் மேற்காணும் பணிகளுக்கான செலவீனத்தொகையினை 2018–2019 வரவு செலவீனத்தில் மேற்க்கொள்ளவும் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

**(ந.க.எண். 354/2018/ இ1)**

**<u>தீர்மானம் எண். 33</u>**

**அஙகீகரிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்– 10</u>**

இந்நகராட்சிப்பொறியியல் பிரிவில் இயஙகும் TN76 A 2283 ஈப்பு வாகனத்தின் பழுதுகளை ரூ.11500/– உத்தேச மதிப்பீட்டில் நீக்கம் செய்ய இந்நகராட்சி தனிஅலுவலர் 22.12.2017 அன்று முன் அனுமதி வழஙகியுள்ளதன் அடிப்படையில் மேற்காணும் பணிக்கு 22.12.2017 அன்று தகுதிவாய்ந்த பணிமனைதாரர்களிடம் நேரடியாக விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்காணும் மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண் | பணிமனைதாரரின் பெயர் மற்றும் முகவரி | விலைப்புள்ளி விலைவிகிதம் |
|---|---|---|
| 1. | மூஸா இஞ்சினியரிங ஒர்க்ஸ்,<br>194, செஙகோட்டை ரோடு,<br>தென்காசி–627811 | ரூ.11330/– |
| 2. | நடராஜன் மோட்டார் ஒர்க்ஸ்,<br>1ஏ, பழைய பேரூந்து நிலையம்,<br>தென்காசி. | ரூ.11750/– |
| 3. | நியூராயல் ஆட்டோமொபைல்,<br>56இ,செஙகோட்டை ரோடு,<br>தென்காசி | ரூ.12300/– |

மேற்காணும் விபரப்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள மூஸா இஞ்சினியரிங ஒர்க்ஸ்,194, செஙகோட்டை ரோடு, தென்காசி, என்பவரின் விலைப்புள்ளியை ஒப்புக்கொண்டு மேற்காணும் வாகனத்தின் பழுதுகள் மற்றும் ஆயில்கள் மாற்றம் செய்ய நடிவடிக்கை மேற்க்கொள்ளவும் அங்கீகாரத்திற்காக சமர்பிக்கப்படுகிறது.

நிர்வாக பணிகள் மற்றும் குடிநீர் பணியின் அவசர அவசியத்தை கருத்திற்கொண்டு TN76 A 2283 ஈப்பு வாகனத்தின் பழுதுகளை நீக்கம் செய்து ஆயில்கள் மாற்றம் செய்ய இந்நகராட்சித்தனி அலுவலர் 22.12.2017 அன்று முன்அனுமதி வழஙகியுள்ளதன் அடிப்படையில் மேற்காணும் வாகனத்தின் பழுதுகள் மற்றும் ஆயில்கள் மாற்றம் செய்ய நடிவடிக்கை மேற்க்கொள்ளப்பட்டதற்கும் அதற்கான செலவீனத்தொகையை வழஙக நடிவடிக்கை மேற்க்கொள்ளப்பட்டதற்கும் அங்கீகாரத்திற்காக சமர்பிக்கப்படுகிறது.

**(ந.க.எண். 4203/2017/ இ1)**

**<u>தீர்மானம் எண். 34</u>**

அஙகீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்– 11</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட 33 வார்டுகளிலும் சொத்துவரி, தொழில்வரி, காலியிடவரி, கடைவாடகை, குடிநீர் கட்டணம் மற்றும் லைசென்ஸ் (D & O), அச்சம் மற்றும் அருவருக்கத்தக்க கட்டணம் ஆகியவற்றை 100% வசூல் செய்யவும் பொது மக்கள் அறியும் வண்ணம் ஐந்து இடங்களில் பிளக்ஸ் போர்டு வைக்கவும், ஆட்டோ மூலம் மைக்செட் அமைத்து அனைத்து வார்டுகளிலும் விளம்பரம் செய்யவும், நகர தொலைகாட்சி சேனலில் (Local Channal) விளம்பரம் செய்யவும் உத்தேச செலவினம் ரூ.2,00,000/– (ரூபாய் இரண்டு இலட்சத்துக்கு மட்டும்) அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

**(ந.க.எண்.4720/2015/அ1)**

**<u>தீர்மானம் எண். 35</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

<u>பொருள் எண்– 12</u>

2017–2018 மே மாதம் முதல் மையப்படுத்தப்பட்ட இணையதள சேவை மூலம் நகராட்சியில் அனைத்து துறை பணிகளும் நடைபெற்று வருகின்றன. இந்நிலையில் புதியதாக தொழில்வரி கோரும் விண்ணப்பத்திற்கு <u>ஊகுஊ</u> மூலம் விண்ணப்ப கட்டணம் வரிவிதிப்பு ஒன்றுக்கு ரூ.100/– வீதம் வசூல் செய்ய அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படுகிறது .

**(ந.க.எண். 336/2018 /அ2)**

**<u>தீர்மானம் எண். 36</u>**

அங்கீகாரிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்– 13</u>**

திட்ட இயக்குநர் (Mission Director) தேதிய சுகாதார இயக்குநரகம், சென்னை அவர்களின் கடித எண்.4943/NUHM/SHS/2015 நாள்.02.09.2015ன் படி இந்நகராட்சிப் பகுதியில் புதிதாக பொது சுகாதார மையம் அமைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் இந்நகராட்சிப் பகுதி வார்டு எண்.2 டவுன் சர்வே வார்டு D, பிளாக் 12 டவுன் சர்வே எண்.2 பழைய சர்வே எண்.234B/2 பாகம் அரசு புறம்போக்கு நிலத்தில் புதிதாக நகர்புற சுகாதாரமையம் ரூ.50,00,000/– மதிப்பீட்டில் அமைக்க இந்நகர்மன்ற தீர்மான எண்.435, நாள்.30.09.2015ல் அனுமதி வழஙகியுள்ளது. அதனடிப்படையில் மாவட்ட ஆட்சித் தலைவர், திருநெல்வேலி அவர்களிடம் தடையில்லா சான்று (NOC) வழஙக கேட்டு கடிதம் அனுப்பட்டதில் மாவட்ட ஆட்சித் தலைவர், திருநெல்வேலி அவர்களின் கடித ந.க.எண். எ2/63255/2015, நாள்.15.12.2016ம் தேதிய கடிதத்தில் நகர்புற சுகாதார மையம் அமைக்க ஏதுவாக வேறு நிலத்தினை தேர்வு செய்து புதிய விண்ணப்பம் அளிக்குமாறு தெரிவித்துள்ளார்கள்.

இந்நிலையில் இரண்டாவது கட்டமாக இந்நகராட்சி பொதுமக்களின் நலனினை கருத்திற் கொண்டு வார்டு எண்.5 கிருஷ்ணாபுரம் சர்வே வார்டு D, பிளாக் 31 டவுன் சர்வே எண்.206, 207 (பழைய சர்வே எண்.24/பாகம்) அரசு புறம்போக்கு பாட்டை நிலத்தில் புதிதாக நகர்புற சுகாதார மையம் கட்டிடம் கட்ட இடம் தேர்வு செய்யப்பட்ட இடத்திற்கு தடையில்லா சன்று (NOC) வழஙக கேட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் , திருநெல்வேலி அவர்களுக்கு இவ்வலுவலக கடித ந.க.எண்.3575/2015/இ1, நாள்.13.03.2017ன்படி கடிதம் அனுப்பப்பட்டு தொடர் நடவடிக்கையில் இருந்தது. இந்நிலையில் வார்டு எண்.5ல் வசிக்கும் பொதுமக்கள் அனைவரும் மேற்காணும் இடத்தில் புதிதாக நகர்புற சுகாதார மைய கட்டிடம் கட்ட கூடாது எனவும் அந்த இடம் எங்கள் சமுதாயத்திற்கு பாத்தியப்பட்டது எனவும் எதிர்ப்பு போராட்டஙகளும் நடைப்பெற்றதால் கோட்டாட்சித் தலைவர், தென்காசி அவர்கள் நேரில் வருகை புரிந்து பேச்சுவார்த்தை நடைபெற்றதில் அப்பகுதி பொதுமக்கள் எஙகள் சமுதாயத்தில் உள்ளவர்களுக்கு இறப்பு நடைபெறும் போது அவர்களின் ஈமச்சடஙகு மற்றும் காரியஙகள் நடைபெறுவதால் அவ்விடத்தில் புதிதாக நகர்புற சுகாதார மையம் கட்ட

கூடாது என்று தொடந்து எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டதால் கோட்டாச்சித் தலைவர் அவர்கள் வேறு இடம் தேர்வு செய்து புதிதாக சுகாதார மையம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தெரிவித்துள்ளார்கள்.

நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருநெல்வேலி அவர்களின் ஆய்வு கூட்ட அறிவுரையில் கடையநல்லூர் நகராட்சிப் பகுதியில் டெஙகு காய்ச்சலின் தாக்கம் தொடர்ந்து இருந்து வருவதால் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடந்து மேற்கொள்ள இந்நகராட்சிக்கு கூடுதலாக புதிதாக நகர்புற சுகாதார மையம் அமைக்க திட்ட இயக்குநர் (Mission Director) தேதிய சுகாதார இயக்குநரகம், சென்னை அவர்களின் கடித எண்.4943/NUHM/SHS/2015 நாள்.02.09.2015ன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு மூன்று ஆண்டுகள் முடிவுற்ற நிலையில் உடன் நகராட்சிப்பகுதியில் தகுதியான இடத்தினை தேர்வு செய்து புதிதாக நகர்புற சுகாதார மையம் அமைக்க தெரிவித்துள்ளார்கள். அதனடிப்படையில் இந்நகராட்சிப்பகுதி வார்டு எண்.27ல் ஒரே ஒரு நகர்புற சுகாதார மையம் மட்டும் உள்ளது. இந்நகராட்சியின் மொத்த மக்கள் தொகை (2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி) 90344 ஆகும். தற்போதைய மக்கள் தொகை.102843 ஆகும். மொத்த வார்டுகள் 33 பகுதிகளைக் கொண்டதாகும். இந்நிலையில் ஒரே ஒரு நகர சுகாதார மையத்தில் வார்டு எண்.1 முதல் 33 வரை உள்ள பகுதிகளில் உள்ள பொதுமக்களுக்கு மருத்துவ வசதி செய்ய இயலாத நிலை உள்ளதால் அவசர அவசியம் மற்றும் அத்தியவசியம் கருதியும் பொதுமக்களின் நலனினை கருத்திற் கொண்டும் இந்நகராட்சிப் பகுதி வார்டு எண்.3 ரயில்வே பீடர் ரோட்டில் பழுதடைந்த நிலையில் அமைந்துள்ள குழந்தைகள் நலமையம் எண்.3, கிருஷ்ணாபுரம் நகரளவை ஆவணஙகளின் படி சர்க்கார் புறம்போக்கு வார்டு எண்.D பிளாக்.14 நகரளவை எண்.7 பழைய சர்வே எண்.83B/2 இடத்தில் பாழடைந்து பயனற்றநிலையில் உள்ள குழந்தைகள் நலமையம் எண்.3–னை இடித்து அப்புறப்படுத்திவிட்டு புதிதாக நகர்புற சுகாதார மையம் அமைக்கவும் அதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.50,00,000/–(ஐம்பது இலட்சம் மட்டும்)க்கு அஙகீகாரம் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

அ) அரசு திட்டபணியாக இருப்பதால் அவசர அவசிய. மற்றும் அத்தியாவசியம் கருதியும் பொதுமக்களின் நலனை கருத்திற் கொண்டு வார்டு எண்.3 ரயில்வே பீடர் ரோட்டில் பயனற்ற நிலையில் உள்ள குழந்தைகள் நலமையம் எண்.3 –னை இடித்து அப்புறப்படுத்திவிட்டு அவ்விட்த்தில் புதிதாக நகர்புற சுகாதார மையம் கட்டிடம் அமைக்கவும், மற்றும் இந்நகராட்சி அரசு புறம்போக்கு வேறு நிலத்தினை தேர்வு செய்து குழந்தை நல மையம்.3க்கு புதிதாக அஙகன்வாடி மைய கட்டிடம் அமைக்கவும் அதற்கான உத்தேச மதிப்பீட்டுத் தொகைக்கும் அஙகீகாரம் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

ஆ) மேற்காணும் பணிக்கு அரசு மான்யமாக ரூ.42,00,000/– (ரூபாய் நாற்பத்தி இரண்டு இலட்சம் மட்டும்) நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்ற விபரம் சமர்பிக்கப்படுகிறது.

இ) மேற்காணும் பணிக்கு கூடுதலாக ஆகும் செலவுத் தொகை ரூ. 8,00,000/– (ரூபாய் எட்டு இலட்சம் மட்டும்)யை இந் நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும் அஙகீகாரத்திற்காக சமர்பிக்கப்படுகிறது.

<u>தீர்மானம் எண். 37</u>

அஙகீகரிக்கப்பட்டது.

தனி அலுவலர்,
கடையநல்லூர் நகராட்சி.